# சக்தி பீடங்கள்


1. தாரா தாரிணி- கஞ்சாம் - ஒரிசா- சக்தி பீடங்கள் ........ 3
2. விமலா தேவி - பூரி ஜகந்நாதர் கோவில் –ஒரிசா- சக்தி பீடங்கள் ........ 4
3. காமாக்யா -அஸ்ஸாம்- சக்தி பீடங்கள் ........ 5
4. காளிகாட் காளி- சக்தி பீடங்கள் ........ 6
5. மஹாமாயா -இரதன்புர் - சத்தீஸ்கர் -சக்தி பீடங்கள் ........ 7
6. புல்லாரா - சக்தி பீடங்கள் அட்டஹாஸ கோவில் மேற்கு வங்காளம் ........ 8
7. பகுளா -மேற்கு வங்காளம்- சக்தி பீடங்கள் ........ 9
8. மகிஷமர்தினி - சக்தி பீடங்கள் பக்ரேஸ்வர் கோவில் – மேற்கு வங்காளம் ........ 10
9. ஹர்சித்தி - சக்தி பீடங்கள் -உஜ்ஜயினி- மத்திய பிரதேசம் ........ 11
10. அபர்ணா தேவி-சக்தி பீடங்கள்-பபானிபூர் – பங்களாதேஷ் ........ 12
11. சின்னமஸ்திகா சக்தி பீடங்கள்-சிந்த்பூரணி- ஹிமாசல் பிரதேசம் ........ 13
12. பிந்தியபாஷிணி - போகாரா – நேபால்- சக்திபீடங்கள் ........ 14
13. சப்தஸ்ருங்கி – நாசிக்- சக்தி பீடங்கள் ........ 15
14. ஹிங்லாஜ் - கராச்சி பாகிஸ்தான்- சக்தி பீடங்கள் ........ 16
15. ஜெயந்தி - பைரவி/ துர்கை - சக்தி பீடங்கள் - நார்டியாங் துர்கை கோவில் - மேகாலயா ........ 17
16. ஜேஷோரேஸ்வரி- பங்களாதேசம் சக்தி பீடங்கள் ........ 18
17. ஜ்வாலா ஜி - காங்கரா- சக்தி பீடங்கள் ........ 19
18. கல்மாதவ் காளி - அமரகாந்தக் -சக்தி பீடங்கள் ........ 20
19. கங்காலேஸ்வரி - காஞ்சன் நகர் - சக்தி பீடங்கள் ........ 21
20. பகவதி / பாலாம்பிகை - கன்யாகுமரி - சக்தி பீடங்கள் ........ 22
21. ப்ராஜேஸ்வரி - ஜெய துர்கா -சக்தி பீடங்கள் ........ 23
22. கிரீடேஸ்வரி - மேற்கு வங்காளம்-சக்தி பீடங்கள் ........ 24
23. ஆனந்தமயி – ரத்னாவளி - சக்தி பீடங்கள ........ 25


பொருளடக்கம் செல்ல

# சக்தி பீடங்கள்

24. பிரமாரி தேவி /மாமேலை சண்டி - சக்தி பீடங்கள்- ஜல்பாய்குரி /ஹௌரா ........ 26
25. மானசரோவர் சக்தி –திபெத்- சக்தி பீடங்கள் ........ 27
26. மணிபந்த் - காயத்ரி தேவி – ராஜஸ்தான்- சக்தி பீடங்கள் ........ 28
27. மிதிலா -ஜனக்பூர் நேபால்- சக்தி பீடங்கள் ........ 30
28. நாகபூஷணி /புவனேஸ்வரி- நயினாதீவு - சக்தி பீடங்கள் ........ 31
29. குகேஸ்வரி - காட்மாண்டு நேபால்- சக்தி பீடங்கள் ........ 32
30. சந்திரநாத் பவானி – பங்களாதேஷ்-சக்தி பீடங்கள் ........ 33
31. வராஹி - பஞ்சஸாகர்- உத்தரகாண்டம்- சக்தி பீடங்கள் ........ 34
32. பிரபாஸ் சக்தி - சந்திரபாக் குஜராத்- சக்தி பீடங்கள் ........ 35
33. அலோபி தேவி - த்ரிவேணி சங்கமம்- அலஹாபாத் - சக்தி பீடங்கள் 36
34. மா பத்ரகாளி – குருக்ஷேத்ரம்- சக்தி பீடங்கள் ........ 37
35. மா சாரதா தேவி – மைஹார்- சக்தி பீடங்கள் ........ 38
36. நந்திகேஸ்வரி - மேற்கு வங்காளம்- சக்தி பீடங்கள் ........ 39
37. விஸ்வேஸ்வரி - ராஜமுந்திரி- சக்தி பீடங்கள் ........ 40
38. நயினா தேவி - ஹிமாச்சல் பிரதேசம்- சக்தி பீடங்கள் ........ 41
39. ஷோந்தேஷ் சக்தி - அமர்காந்தக்- சக்தி பீடங்கள் ........ 42
40. ஶ்ரீ சுந்தரி - ஶ்ரீ சைலம்- சக்தி பீடங்கள் ........ 43
41. ப்ரமராம்பிகை - ஶ்ரீ சைலம்- சக்தி பீடங்கள் ........ 44
42. நாராயணி – சுசீந்திரம்- சக்தி பீடங்கள் ........ 45
43. சுகந்தா – சிகர்புர்- சக்தி பீடங்கள் ........ 46
44. திரிபுர சுந்தரி- உதய்பூர்- சக்தி பீடங்கள் ........ 47
45. மங்கள சண்டிகா - உஜ்ஜானி - சக்தி பீடங்கள் ........ 48
46. விசாலாக்ஷி – காசி- சக்தி பீடங்கள் ........ 49
47. கபாலினி - விபாஷ் - சக்தி பீடங்கள் ........ 50
48. அம்பிகா - பராத்பூர் நகர் – ராஜஸ்தான்- சக்தி பீடங்கள் ........ 51
49. காத்யாயினி – வ்ருந்தாவன்- சக்தி பீடங்கள் ........ 52
50. திரிபுர மாலினி –ஜலந்தர்- சக்தி பீடங்கள் ........ 53
51. காமாட்சி – காஞ்சிபுரம்- சக்தி பீடங்கள் ........ 54

பொருளடக்கம் செல்ல

# சக்தி பீடங்கள்

# 1. சக்தி பீடங்கள்சக்தி பீடங்கள்சக்தி பீடங்கள்சக்தி பீடங்கள்சக்தி பீடங்கள்தாரா தாரிணி- கஞ்சாம்  - ஒரிசா- சக்தி பீடங்கள்

ஆதியாய் பீடங்களில் அமைந்த சக்தியே
ஜோதியாய் உலகில் ஜொலிக்கும் சக்தியே
வீதிகளில் நிரம்பும் வீரிய சக்தியே
பாதிவடிவாய் சிவனின் பக்கத்து சக்தியே

அங்கும் இங்குமென ஆடிடும் சக்தியே
பொங்கும் அழகில் பொலிவான சக்தியே
அங்கங்களாய்  விழுந்த அரும்பெருஞ் சக்தியே
சிங்கத்தில் அமர்ந்த சிம்மாசன சக்தியே

தன்னையே அழித்த தாட்சாயணி சக்தியே
தன்னை ஏமாற்றும் தாராதேவி சக்தியே
உண்மை எதுவென்று உரைக்கும் சக்தியே
மண்ணில் விழுந்த மார்பக சக்தியே

பூரியில் அமைந்த பூரிப்பான சக்தியே
கோரிக்கை வைப்பேன் காப்பாய் சக்தியே
மாறிவிடும் வாழ்வில் மாறாத சக்தியே
ஏறிடும் சக்கரத்தில் ஏற்றிடுவாய் சக்தியே

ஆயிரம் படிகளுடன் ஆலயத்து சக்தியே
வாயினால் பாடிட வார்த்தையாகும் சக்தியே
சேயினைக் காத்திட சிலையான சக்தியே
தாயின் வடிவான தாராதாரிணி சக்தியே

பொருளடக்கம் செல்ல

2. விமலா தேவி - பூரி ஜகந்நாதர் கோவில் –ஒரிசா- சக்தி பீடங்கள்

ஒரிசாவில்  அமர்ந்த ஒய்யார சக்தியே
பரிசாய் கிடைத்த பார்வதியின் சக்தியே
புரியாத புதிராய் பூரியின் சக்தியே
அறியாத அறிவாய் அன்னை சக்தியே

ஜெகந்நாத கோவிலின் ஜெயமான சக்தியே
அகத்தின் கோவிலில் அழகான சக்தியே
சுகத்தைத் தந்திடும் சுந்தர சக்தியே
மகத்துவம் வாய்ந்த மந்திர சக்தியே

பாதையை காட்டும் பாதங்களின் சக்தியே
காதையாய் புராணத்தின் காளிகா சக்தியே
போதையை நீக்கிடும் புண்ணிய சக்தியே
பேதையைக் காத்திடும் பெரிய சக்தியே

அன்னத்தை பிரசாதமாய் அளிக்கும் சக்தியே
அன்னமாய் நல்லதுதீயதை பிரிக்கும் சக்தியே
இன்னலைப் போக்கிடும் இனிய சக்தியே
இன்னொரு பிறவியை இல்லாதாக்கும் சக்தியே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

## 3. காமாக்யா -அஸ்ஸாம்- சக்தி பீடங்கள்

உலகத்தின் மூலமான ஒய்யார யோனியே
கலந்திடும் சிவமான காமாக்யா சக்தியே
குலங்களைக் காக்கும் குவஹாத்தி கோவிலே
தலங்களில் அமர்ந்து தரணியைக் காப்பவளே

ஆதியும் மூலமுமாய் ஐயங்கள் அகற்றுபவளே
மீதியும் இல்லாத முழுமுதற் பூரணமே
பாதி வடிவான பராசக்தி அன்னையே
சாதிகள் கடந்த சரித்திர உண்மையே

தசமகா வித்யாவாய் தாட்சாயணி தாயே
தசைகளை இயக்கம் தந்திர சூடாமணியே
அசையும் பொருளின் அசையா பொருளே
இசைக்கும் மந்திரத்தின் இணையில்லா ஒலியே

சோபிக்கும் சுந்தரியே கோபிக்கும் காளியே
வியாபிக்கும் பகளாமுகியே வேகமான பைரவியே
ஆலிங்கன சின்னமஸ்தாவே அழகான மாதங்கியே
மூளியான துமாவதியே முழுதான கமலாத்மிகியே

பூத்திடும் புவனேஸ்வரியே புதிதான தாரையே
காத்திடும் சக்தியே காமாக்யா அன்னையே
தோத்திரம் பாடிட தோன்றிய கடவுளே
சாத்திரம் ஆகிய சத்திய ஓங்காரமே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

## 4. காளிகாட் காளி- சக்தி பீடங்கள்

ஆலமாய் உலகினை அளக்கும் காலமே
காலமாய் காக்கும் காளியின் கருமையே
கருமையின் வடிவாய் காத்திடும் உருவமே
உருவத்தில் வழிந்திடும் உக்கிர உண்மையே
உண்மையைத் தெளிவாய் உருவாக்கும் அன்னையே
அன்னையாய் வங்காள ஆதிகங்கை காளியே
காளியாய் கால்பதித்த கல்கொத்தா சூலியே
சூலியாய் உலகத்தை சூட்சமமாய் சுமப்பவளே
சுமந்தபடி இரவாய் சுருண்டிடும் கமலாவே
கமலமாய் விரிந்திடும் காருண்ய ஒளியே
ஒளியாய் ஒளிர்ந்து ஒலித்திடும் ஒலியே
ஒலியைக் கேட்டிடும் ஓங்கார செவியே
செவியாய் நாசியாய் செந்நாவாய் விழியே
விழியாய் வித்தையாய் வீற்றிடும் முகமே
முகமே விழுந்திட்ட முதலான அகமே
அகத்தில் அமர்ந்த ஆதிசக்தி பீடமே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

## 5. மஹாமாயா -இரதன்புர் - சத்தீஸ்கர் -சக்தி பீடங்கள்

மாயையின் மாயையே மகத்துவ மாயையே
மாயையாய்  தொண்டையும் மண்ணிலே வீழுமே

ஓயாத சம்சாரத்தில் ஒய்யார மாயையே
சாயாத ஒலியாய் சத்திய  மாயையே

தந்திர வழியில் தரணியின் மாயையே
யந்திர வடிவில் யௌவன மாயையே

மந்திர அன்னையாய் மாசில்லா மாயையே
இந்திரயம் அடக்கும் இணையில்லா மாயையே

கல்வியாய்இ செல்வமாய் களங்கமில்லா மாயையே
இல்லாததாய் இருப்பதாய் எங்கும்நிறை மாயையே

சக்தியாய் சிவமாய் சாகசமான மாயையே
புத்தியாய் சித்தியாய் புவனத்து மாயையே

எண்ணாய் எழுத்தாய் எண்ணமான மாயையே
விண்ணாய் மண்ணாய் வீறிடும் மாயையே

மலையாய் அலையாய் கலையான மாயையே
சிலையாய் சமாதியாய் சிகரமான மாயையே

கடலாய் நீராய் காலமான மாயையே
உடலாய் உள்ளமாய் உள்ளிருக்கும் மாயையே

விழிப்பாய் கனவாய் உறங்கும் மாயையே
அழிவாய் படைப்பாய் அண்டமான மாயையே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

## 6. புல்லாரா - சக்தி பீடங்கள் அட்டஹாஸ கோவில் மேற்கு வங்காளம்

இனிப்பாய் இனிக்கும் இதமான இதழே
கனிவாய் சிரிக்கும் காருண்ய இதழே

மேலும் கீழுமாய் மேவிடும் இதழே
பாலும் பழமுமாய் பரவச இதழே

புல்லாரா கோவிலில் பூத்த இதழே
அல்லும் பகலும் அணைக்கும் இதழே

அகண்டு பரவிய அண்டத்து இதழே
நிகண்டுகள் அறியாத நிஜமான இதழே

விஸ்வேஸ்வரர் தன்னுடன் வீற்றிடும் இதழே
விஸ்வரூபமாய் உலகில் விரிந்திடும் இதழே

மிகுதியான சிரிப்புடன் மிதக்கும் இதழே
பகுதியில் விழுந்த பார்வதி இதழே

மொட்டாய் மலராய் முத்தமிடும் இதழே
அட்டஹாச ஊரில் அமைந்த இதழே

எட்டுவரி பாடலில் எட்டாத இதழே
மட்டில்லா அழகான மந்தஹாச இதழே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

# 7. பகுளா -மேற்கு வங்காளம்- சக்தி பீடங்கள்

இடதுகை விழுந்த இவ்வுலக இடமே
இடர்களைப் போக்கும் இயல்பான இடமே

இடது புறத்தின்  இதமான இடமே
இடபாகத் தமைந்த இனிதான இடமே

இடதும் வலதுமாய் இசைக்கும் இடமே
இடத்தில் கரமாய்  இருக்கும் இடமே

தடைகள் நீக்கும் தனயனுடன்  இடமே
இடையில் கார்த்திகேயன் இருக்கும்  இடமே

இறுமாப்பு நீக்கும் ஈசனுடன் இடமே
இருதய பைரவபீருக் இணைந்த இடமே

இல்லையென்ற சொல்லே இல்லாத இடமே
இல்லத்தின் அரசியாய் இருக்கும்  இடமே

நினைத்தது நடக்கும் நிஜமான இடமே
நினைவாய் மாறிடும் நித்தியமான இடமே

பகுளா தேவியாய் பாதைகாட்டும் இடமே
தகுதியைத் தந்திடும் தரணியின் பீடமே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

## 8. மகிஷமர்தினி - சக்தி பீடங்கள் பக்ரேஸ்வர் கோவில்–மேற்கு வங்காளம்

மாசில்லா தாயே மனதினில் வருவாய்
ஆசிகள் தருவாய் அழகாய் காப்பாயே
வீசிடும் காற்றில் வித்தைகள் செய்வாய்
பேசிடும் பேச்சில் பேதையைக் காப்பாயே

வக்கிரங்கள் அழிக்க வாகாய் வருவாய்
உக்ரமும் கொண்டு உள்ளத்தில் அமர்வாயே
சக்ரமும் காத்து சங்கடம் போக்க
சக்தியாய் அமைந்த பக்ரேஸ்வர் கோவிலுமே

நெற்றிக்கண் நீயாய் நேர்மையை சொல்லிட
வெற்றியும் வந்திட வீரியம் பொங்கிடுமே
கற்றது யாவும் கைமண் அளவே
பற்றுகள் நீக்கிட பாதையும் தருவாயே

உற்றது அகந்தையாய் உள்ளது சும்பனே
சுற்றங்கள் போற்றிட சுகமாய் நிசும்பனே
அசுரர்கள் இருவரை அழித்திட வருவாயே
சிசுக்களைக் காத்திட சிவசக்தி தாயும் நீயே

மகிஷனும் அழிந்திட மாறாஉண்மை புலப்படுமே
அகிலத்து அன்னையாய் அண்டமும் ஆனவளே
சக்தியின் பீடங்கள் சரித்திரம் ஆகிடுமே
புத்தியும் அறிந்திட பூரணம் புலப்படுமே

பொருளடக்கம் செல்ல

## 9. ஹர்சித்தி - சக்தி பீடங்கள் -உஜ்ஜயினி- மத்திய பிரதேசம்

அண்டத்தின் அன்னையே அகிலாண்ட ஈஸ்வரியே
சண்டாசுரனை வதைத்தவளே சக்தியாய் சாதிப்பவளே

சொக்கட்டான் ஆடியே சொக்கனை ஈரத்தவளே
பக்கத்தில் அமர்ந்தபடி பலங்களைத் தருபவளே

விந்திய மலையின் விளையாட்டு அன்னையே
இந்திய மண்ணின் இயல்பான சக்தியே

கயிலையைக் காத்திட கணநேரத்தில் வந்தவளே
கயிறாய் மனதைக் கையிலே கொண்டவளே

அன்னத்தை அளிப்பவளே ஹரனுக்கும் சக்தியே
இன்னமுதாய் ஆனவளே இமயத்து சக்தியே

காணமுடியாத காலமே கண்ணறியா கருமையே
ஆணவத்தை அடக்குவாயே ஆண்டு என்னை கொள்வாயே

மத்திய பிரதேசத்து மையமான அவந்தியே
சத்திய சக்தியே சரித்திர உண்மையே

முழங்கை விழுந்திட முழுமை புரியுமே
பழகிய அன்னையாய் பாதையில் வருவாயே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

## 10. அபர்ணா தேவி-சக்தி பீடங்கள்-பபானிபூர் – பங்களாதேஷ்

முழுமையை வேண்டியே முன்னின்ற தேவியே
விழுந்திடும் இலையும் விழுங்காத அபர்ணாவே

வலையாய் சம்சாரம் வாகாய் சிக்கிவிட
வலையை அறுத்திட வருவாய் தேவியே

கொலுசும் விழுந்திட கொலுவான  சக்தியே
குலுங்கும் அழகில் குமரியான சக்தியே

அர்ப்பணிக்கும் பக்தருக்கு அபூர்வ  சக்தியே
சிற்பமாய் இருந்தபடி சிந்தை கவர்வாயே

பவானியாய் தாராவாய் பபானிபூர் அமர்ந்தவளே
சுவாசத்தின் நாடியாய் சுமைகளைத் தாங்குபவளே

வளையலை வாங்கிட வஞ்சியாய் வந்தவளே
வேளையில் தரிசனம் விளையாட்டாய் தந்தவளே

முதலும் முடிவுமாய் முடியாத வளையலே
விதவித வடிவாய் விரியும் அன்னையே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

## 11. சின்னமஸ்திகா சக்தி பீடங்கள்-சிந்த்பூரணி- ஹிமாசல் பிரதேசம்

திருமண தம்பதியரின்  தோத்திர சக்தியே
இருமனம் இணைய இதம்தரும் சக்தியே

தாம்பத்ய வாழ்வின் தாத்பர்ய சக்தியே
காம்யா தேவியின் காருண்ய சக்தியே

சிற்றின்ப தேவதை சின்னமஸ்திக சக்தியே
பெற்றிடும் ஆசைகளை பூர்த்தியாக்கும் சக்தியே

எழிலாய் இரதியை எழச்செய்யும் சக்தியே
அழியா பேரின்ப அதிசய சக்தியே

தன்தலை தானறுத்த தாமரை சக்தியே
தந்திர கலையின் தாட்சாயணி சக்தியே

அருளாய் பொழியும் அமுதமான சக்தியே
செருக்கை அழிக்கும் சீரான சக்தியே

சுருண்ட குண்டலினியின் சுடரான சக்தியே
இருளகல மேலெழும்பும் இயல்பான சக்தியே

மங்களம் தந்திடும் மகாவித்யா சக்தியே
தங்கிடும் வித்தையின்  தசமகா சக்தியே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

# 12. பிந்தியபாஷிணி - போகாரா – நேபால்- சக்திபீடங்கள்

காடும் மலையும் காட்சியாய் தெரிவாளே
ஓடும் நதியில் ஒய்யாரமாய் உலவுவாளே
தேடும் விழிகளுக்கு திவ்யமாய் தெரிவாளே
நாடும் நகரமும் நலமாய் அமைப்பாளே

பாடும் பாட்டினில் பாஷினி வருவாளே
ஆடும் காலத்தில் ஆனந்தமாய் இருப்பாளே
சாடும் வன்முறை சரிந்திட வருவாளே
வீடும் மனமும் வாழ வைப்பாளே

கோடும் புள்ளியும் கோலமாய் அமைவாளே
ஏடும் எழுத்தும் எண்ணமுமாய் விரிவாளே
கூடும் அன்பர்கள் குதூகல தரிசனமே
கேடும் பிணியும் கிட்டாது ஓடுமே

கல்லும் மண்ணும் காளியாய் மாறிடுமே
புல்லும் புலனும் புவியில் அடங்கிடுமே
நல்லதும் தீயதும் நாயகி அவளாகுமே
அல்லும் பகலும் அயராது காப்பாளே

விந்திய மலையில் விரிந்திடும் அன்னையே
இந்திய எல்லையின் எழிலான அன்னையே
இந்திரியம் காக்கும் இமயத்து அன்னையே
தந்திர வழியின்  தயாளு அன்னையே

விழுந்த நெற்றியின்  வீரிய சக்தியே
அழுக்காறு போக்கும் ஆக்க சக்தியே
எழுந்த சாளிகிராம  ஏகாந்த சக்தியே
குழுமிய பக்தருள் கோலாகல சக்தியே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

## 13. சப்தஸ்ருங்கி – நாசிக்- சக்தி பீடங்கள்

பத்தடி உயர பத்ரகாளி தாயே
கத்தியும் கடிவாளும் கரமேந்திய தாயே

பதினெட்டு கரமுடைய பார்வதி தாயே
அதிசய உருவமான  அண்டத்தின் தாயே

ஏழு மலைகளின் எழிலான தாயே
ஏழு பிறவிக்கும் ஏகாந்த தாயே

முகவாய் விழுந்த மூலத்தல தாயே
அகத்தில் தெரிந்திடும் அழகான தாயே

ஆசைகள் நிறைவேற அருளும் தாயே
பூசைகள் ஏற்கும் புவனத்து தாயே

ஊரின் எல்லையாய் உலகத்து தாயே
காரிருள் காளியாய் காவலாகும் தாயே

உயிரின் மூச்சாய் உருவாகும் தாயே
உயிரினை உதிரத்தில்  உருவாக்கும் தாயே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

## 14. ஹிங்லாஜ் - கராச்சி  பாகிஸ்தான்- சக்தி பீடங்கள்

தலையான இடத்தில் தலையை வைத்தவளே
கலையாய் அழகுடன் கல்லாய் ஆனவளே

உருவத்தில் குங்குமம் உற்சாகமாய் ஏற்றவளே
புருவத்து நெற்றியுடன்  புவனத்தில் பூத்தவளே

எல்லைகள் இல்லாது எங்கும் நிறைபவளே
துல்லிய உண்மையாய் தூய்மை தருபவளே

கல்லும் முள்ளும் காளியின் வடிவமே
அள்ளும் அழகும் அவளின் சுந்தரமே

இல்லாத இடமே இல்லாத அன்னையே
சொல்லிட முடியாத சௌந்தர்ய சக்தியே

திக்குகள் எட்டும் திகழும் சக்தியே
சக்தியாய் சிவமாய் சாகசம் செய்வாயே

நானி கோவிலாய் நாட்டாரை நாடவைப்பவளே
ஆணி வேராகி அண்டத்தில் விரிந்தவளே

மதங்கள் கடந்து மண்டலத்தில் நிறைபவளே
விதவித உருவாய் விசித்திரம் புரிபவளே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

# 15. ஜெயந்தி - பைரவி/ துர்கை - சக்தி பீடங்கள் - நார்டியாங் துர்கை கோவில் - மேகாலயா

துன்பத்தைப் போக்கிடும் துர்கை அன்னையே
இன்பத்தை அளிக்கும் இவ்வுலக அன்னையே
கண்மூட கனவில் காட்சிதரும் அன்னையே
மண்ணில் விழுந்த மலர்தொடை அன்னையே

மேகத்தின் அலையாய் மின்னலின் அன்னையே
வேகமான அருவியாய் விழுந்திடும் அன்னையே
ஏகமாய் பலதாய் எங்கும்நிறை அன்னையே
பாகமாய் இடதில் பார்வதி அன்னையே

மேகாலயா மாநிலத்தில் மேவிடும் அன்னையே
போகாத ஊரிலும் பொலிவான அன்னையே
சுகங்கள் தந்திடும் சுந்தர அன்னையே
அகத்தினை காத்திடும் அகிலாண்ட அன்னையே

எண்ணங்களை செயலாக்கும் எழிலான பைரவியே
மண்ணிலே மலர்ந்திடும் மகரந்த பைரவியே
நுண்ணிய அணுவாய் நூதன பைரவியே
விண்வரை விரிந்திடும் வீரிய பைரவியே

பொருளடக்கம் செல்ல

## 16. ஜேஷோரேஸ்வரி- பங்களாதேசம் சக்தி பீடங்கள்

உள்ளங்கை விழுந்து உள்ளத்தைப் பிடித்தவளே
உள்ளதை உள்ளபடி உளமார சுமப்பவளே

உள்ளது யாவும் உன்னுருவமெனக் கொண்டவளே
தெள்ளிய மொழியாய் திகட்டாத ஈஸ்வரியே

கள்ளமில்லா சிரிப்புடன் களங்கமில்லா சிசுவே
தள்ளாடும் முதுமையாய் தடுமாறும் மூர்ப்பே

அள்ளிடும் அழகாய் அண்டம் நிறைந்தவளே
எள்ளி நகையாடும் எகத்தாள உண்மையே

ஒளிரும் உள்ளங்கையாய் ஒளிந்த சுடரே
விளித்தால் வந்திடும் விழியின் அருளே

ஜெயங்களை அளிக்கும் ஜேஷோஸ்வரி அன்னையே
பயங்களைப் போக்கும் பத்ரகாளி அன்னையே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

## 17. ஜ்வாலா ஜி - காங்கரா- சக்தி பீடங்கள்

மாயை நீயாக மங்கை நீயாக
சேயை காத்திடும் செந்நிற தீயே

தீயாக பாறையில் திக்கெட்டும் பரவியே
தாயாக நீநிற்க தலைவணங்கும் தினமே

தினமும் எரிந்தாலும் திரளாய் குவிந்தாலும்
சினமும் அடங்காத சீற்றலான சிறப்பே

சிறப்பான நாவாகி செவிக்கு பேச்சாகி
உறவுகளை வளர்க்கும் உண்மை உணர்வே

உணர்விலே கலந்து உள்ளத்தில் புகுந்து
அணைக்க முடியாத அதிசய நெருப்பே

நெருப்பை குளிர்விக்க நீரும் தெளித்திட
கருத்தினைக் கவர்ந்திடும் காலமான மாயையே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

# 18. கல்மாதவ் காளி - அமரகாந்தக் -சக்தி பீடங்கள்

தேடும்  விழிகளுக்குத் தெரியும் தேவியே
பாடும் பாடலில் பவனிவரும் தேவியே

ஓடும் நதிகளில் ஒய்யார தேவியே
சேரும் சங்கமத்தில் சிந்தாமணி தேவியே

கல்மாதவ கோவிலில் காளியான தேவியே
கல்லிலும் காட்டிலும் கால்பதித்த தேவியே

நரம்பினைக் காக்கும் நர்மதா தேவியே
வரம்பில்லா சீற்றமாய்  வலம்வரும் தேவியே

சோபிக்கும் சோன்நதியே ஜோதியான தேவியே
கோபிக்கும் ஜோகிலாவே கொந்தளிக்கும் தேவியே

மத்யபிரதேச பிருஷ்டமே மங்கள தேவியே
சத்திய வடிவான  சாமுண்டி தேவியே

ஆவியைத் தொட்டிடும் ஆனந்த தேவியே
ஏவிய வினைகளை எரிக்கும் தேவியே

சேவித்து வணங்கிட சிங்கார தேவியே
கோவிலில் காளியாய் குடிகொண்ட தேவியே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

# 19. கங்காலேஸ்வரி - காஞ்சன் நகர் - சக்தி பீடங்கள்

கண்கவர் காளியே கங்காலேஸ்வர  காளியே
கிண்கிணி காளியே கீர்த்திமிகு காளியே

கடலருகில் காளியே காவலிரு காளியே
கடவுளான காளியே கர்பதேவ காளியே

கலக்கும் காளியே கலியுக காளியே
கலப்படமில்லா காளியே காஞ்சன காளியே

குங்கும காளியே குலம்காக்கும் காளியே
கங்காவின் காளியே காலமான காளியே

கூடுமெலும்பு காளியே கீழ்விழும் காளியே
கேடும்தவிர் காளியே கிறங்கடிக்கும் காளியே

கம்பீர காளியே காலபைரவ காளியே
கும்பிடுவோம் காளியே குறைதீர்ப்பாய் காளியே

கருத்தான காளியே காரிருள் காளியே
கருவிழி காளியே காந்தமான காளியே

காட்டின் சாமுண்டியே கைகூப்பும் சமணமே
நாட்டின் நாயகியே நாடவைக்கும் காளியே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

## 20. பகவதி / பாலாம்பிகை - கன்யாகுமரி - சக்தி பீடங்கள்

கன்னியாய் நின்றபடி காலத்தை வென்றவளே
தந்நிகர் இல்லாத தமிழ்நாட்டு கன்னியே

கடலோரம் கால்பதித்த கன்யாகுமரி சக்தியே
இடர்களைப் போக்கும் இசையான கடலே

என்றும் அழகான இளமை உருவே
அன்றும் இன்றும் அழியாது  என்றுமானவளே

சிறுமியாய் நின்றபடி சிந்தை கவர்பவளே
குறுகுறு பகவதி குழந்தை சிறுமியே

சர்வத்தையும் செயலாக்கும் சர்வாணி சக்தியே
கர்வத்தை அடக்கும் களங்கமில்லா சர்வமே

சிந்தையை செயலாக்கும் சீரான முதுகே
விந்தையாய் இவ்விடம் விழுந்த சிந்தையே

முதுமை இல்லாத முதன்மை சக்தியே
புதுமை வாய்ந்த புத்துயிர் முழுமுதலே

சிவனை மணக்கவே சிந்தை கொண்டவளே
அவனியில் ஆற்றலை  அளிக்கும் சிவசக்தியே

அற்புத கன்னியாய் அவதரித்த சக்தியே
அற்பமான பானாசுரனை அழித்த அற்புதமே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

## 21. ப்ராஜேஸ்வரி - ஜெய துர்கா -சக்தி பீடங்கள்

ஜெயங்களைத் தந்திடும் ஜெயஜெய துர்காவே
பயங்களைப் போக்கிடும் ப்ராஜேஸ்வரி  துர்காவே

இமாச்சல பிரதேச இறுமாப்பு துர்காவே
இமாலய சக்தியின் இனிய துர்காவே

மலர்விழி மங்கையின் மார்பக துர்காவே
புலன்களை அடக்கும் புத்துயிர் துர்காவே

மெய்யான வடிவமே மேருமலை துர்காவே
பொய்யில்லா உணர்வே பொலிவான துர்காவே

கொட்டும் மேளத்தில் குதூகல துர்காவே
எட்டுதிக்கும் எழுந்த எகத்தாள துர்காவே

சுழலும் காற்றே சூறாவளி துர்காவே
உழலும் மனமே உறங்கா துர்காவே

காலமான காளியே காரிய துர்காவே
நீலமான கடலே நித்யமான துர்காவே

நவரச நாயகியே நாட்டிய துர்காவே
நவராக மாலிகையே நலம்தரும் துர்காவே

தசமகா வித்யாவே தாட்சாயணி துர்காவே
தசைகளை காப்பவளே தாரணயின் துர்காவே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

## 22. கிரீடேஸ்வரி - மேற்கு வங்காளம்-சக்தி பீடங்கள்

கங்கைக்கர கீர்த்தியே கரைதங்கிய கிரீடமே
இங்கிருக்கும் கீர்த்திகோனே இச்சகத்து விமலாவே

மங்களம் பொங்கிய மங்கையின் கிரீடமே
வங்காள தலத்தில் விரிந்திடும் விமலாவே

நடனம் ஆடிடும் நாட்டிய கிரீடமே
விடத்தை தடுத்த வீரியமான விமலாவே

பாடிடும் தில்லானாவில் பளபளக்கும் கிரீடமே
ஓடிடும் நதிகளில் ஒளிரும் விமலாவே

பீடங்களாய் விழுந்த பெருமைமிகு கிரீடமே
மாடங்களில் மிளிரும் மங்கள விமலாவே

பொன்னிற வண்ணத்தில் பொலிவான கிரீடமே
செந்நிற வண்ணத்தில் சிரிக்கும் விமலாவே

தலையினை காத்திடும் தங்கமான கிரீடமே
தலைமுறை காத்திடும் தாயான விமலாவே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

# 23. ஆனந்தமயி – ரத்னாவளி - சக்தி பீடங்கள

ஆடும் தாண்டவம் அண்டத்தில் ஆனந்தமே
பாடும் பாடலுள் பார்வதி ஆனந்தமே

சக்தி என்பது சத்திய ஆனந்தமே
புத்திக்குப் புரிந்தால் புலனும் ஆனந்தமே

ரத்னாவளி கோவிலுள் ராஜகுமாரி ஆனந்தமே
ரத்னமாய் ஒளிரும் ரம்யம் ஆனந்தமே

தோள்பட்டை விழுந்த  தொன்மை ஆனந்தமே
வாள் கொண்டு வந்தவராகி ஆனந்தமே

மேற்கு வங்காளத்தில் மேவிய ஆனந்தமே
நேற்றும் இன்றும் நிற்கும் ஆனந்தமே

காற்றில் அசையும் காலமும் ஆனந்தமே
சேற்றில் மலரும் செந்தாமரை ஆனந்தமே

பிறப்பென்று சொல்லும் புதுமை ஆனந்தமே
இறப்பென்று தழுவும் இயல்பும் ஆனந்தமே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

## 24. பிரமாரி தேவி /மாமேலை சண்டி - சக்தி பீடங்கள்- ஜல்பாய்குரி /ஹௌரா

இனிய தமிழாய் என்னுள்ளிரு தேனே
கனியும் மனதைக் கவரும் தேனே

அசுரனை அழித்த ஆவேச தேனே
சிசுவுக்கு மருந்தாகும் சிசுருஷை தேனே

சிவனுக்குப் பின்னால் சிறந்த தேனே
அவனியைக் காக்க அவதரித்த தேனே

பிரம்மனும் வணங்கும் பிரமாரி தேனே
சிரங்கள் வணங்கும் சிற்பத்தின் தேனே

இடதுகால் விழுந்த இடத்து தேனே
இடதுமுட்டி விழுந்த இவ்விட தேனே

திகழும் நதியின் தீஸ்தகரை தேனே
புகழ்வாய்ந்த புவியில்  பூத்த தேனே

மாமேலை சண்டியாய் மங்கள தேனே
காமேஸ்வரி  ரூபமாய் ஹௌராவின் தேனே

எப்படி பாடினாலும் இனிக்கும் தேனே
தப்பாது என்நாவைத் தழுவும் தேனே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

## 25. மானசரோவர் சக்தி –திபெத்- சக்தி பீடங்கள்

பிரம்மனின் மனதில் பிறந்த ஏரியே
கரங்களை கூப்பியே கண்டிடுவேன் ஏரியே

மனமாய் குணமாய் மாறிடும் ஏரியே
தனமாய் பாவங்கள் தணிக்கும் ஏரியே

தரணியின் சக்தியாய் தாட்சாயணி ஏரியே
வரங்களைத் தந்திடும்  வளமான ஏரியே

வலதுகரம் விழுந்த வற்றாத  ஏரியே
தலங்களில் சிறந்த தான்தோன்றி ஏரியே

இறக்காத அமரனின் ஏகாந்த ஏரியே
பிறவிப்பயனை அளிக்கும் பிரம்மாண்ட ஏரியே

இந்துவும் புத்தரும் இணையும் ஏரியே
இந்துவும் பிறநதிகளும் உருவாகும் ஏரியே

கயிலை மலையின் கண்கவர் ஏரியே
உயிரை உணர்வை உருவாக்கும் ஏரியே

பற்றுகள் அறுக்கும் பரந்த ஏரியே
உற்ற துணையாய் உடனிருக்கும் ஏரியே

உயர்ந்த மலையில் உப்பில்லா ஏரியே
அயராத மனதிற்கு ஒப்பில்லா ஏரியே

காண கண்கோடி வேண்டும் ஏரியே
மாணப் பெரிதான மானச  ஏரியே

திகைக்க வைக்கும் திபெத்தின் ஏரியே
பகையை அழிக்கும் பார்வதி ஏரியே

உன்புகழ் பாடவே ஓடிவருவேன் ஏரியே
பன்னிரண்டு வரிகளில் பாடிடுவேன் ஏரியே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

# 26. மணிபந்த் - காயத்ரி தேவி – ராஜஸ்தான்- சக்தி பீடங்கள்

ॐ भूर्भुवः स्वः
तत्सवितुर्वरेण्यं ।
भर्गो देवस्य धीमहि
धियो यो नः प्रचोदयात् ॥

மணிக்கட்டை விழுந்த மாதா காயத்ரிதேவி
மணிபந்த்தில் விழுந்த மாதா காயத்ரிதேவி

அணிகலனாய் ஜோதி அழகு காயத்ரிதேவி
தணிகாசலம் பெற்ற தாயே காயத்ரிதேவி

சிந்தைக்கு தெளிவு சிறக்க காயத்ரிதேவி
பந்தங்கள் அறுக்கும் பார்வதி காயத்ரிதேவி

வேதங்கள் ஓதும் வித்யா காயத்ரிதேவி
பாவங்கள் போக்கும் பாதை காயத்ரிதேவி

ஆன்மீக ஒளியே அருளே காயத்ரிதேவி
வான்ஒளி போலவே வளர்க காயத்ரிதேவி

தியான நிலையே திவ்யம் காயத்ரிதேவி
மயான அமைதி மாறா காயத்ரிதேவி

பாகுபாடு இல்லா பவித்ர காயத்ரிதேவி
வேறுபாடு அழித்த வேதம் காயத்ரிதேவி

ஆனந்த நிலை அதுவே காயத்ரிதேவி
வானத்து ஜோதி வாழ்க காயத்ரிதேவி

மதியையும் காக்கும் மத்ய காயத்ரிதேவி
விதியையும் மாற்றும் வித்தக காயத்ரிதேவி

சாத்திர மந்திர சாவித்ரி காயத்ரிதேவி

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

பூத்திடும் பூமலர் புவனத்து காயத்ரிதேவி

இருபத்தி நான்கு அட்சர காயத்ரிதேவி
இருளைப் போக்கும்  இத்தலத்து காயத்ரிதேவி

பொருளடக்கம் செல்ல

# சக்தி பீடங்கள்

# 27. மிதிலா -ஜனக்பூர் நேபால்- சக்தி பீடங்கள்

ஜகத்தை காத்திடும் ஜனக்பூர் சக்தியே
அகத்தை காத்திடும் அழகிய சக்தியே

மிதிலை நகரத்து மைதிலி சக்தியே
அதிசய மண்டபத்தில் அருளும் சக்தியே

துக்கங்கள் போக்கும் துர்கை சக்தியே
பக்கத்தில் வந்திடும் பரவச சக்தியே

தோள் விழுந்த தொன்மை சக்தியே
தோள் கொடுக்கும் தோழமை சக்தியே

சிதைக்க இயலாத சீரான சக்தியே
விதையாய் முளைக்கும் வீரிய சக்தியே

பூமியில் உருவான பூந்தளிர் சக்தியே
ஜோதி வடிவான சீதையின் சக்தியே

இடது பாகமாய் இருக்கும் சக்தியே
இடது தோள் இருக்கும் சக்தியே

உண்மை உருவான உமையின் சக்தியே
மண்ணில் இருக்கும் மகோதர சக்தியே

புத்திக்குப் புரியாத பூரிப்பான சக்தியே
சத்திய உருவான சாகச சக்தியே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

## 28. நாகபூஷணி /புவனேஸ்வரி- நயினாதீவு - சக்தி பீடங்கள்

யாழினை மீட்டிடும் யாழ்ப்பாண ஈஸ்வரியே
வாழிஎன்று  வாழ்த்த வாகான ஈஸ்வரியே

புவனத்தை உருவாக்கும் புதுப்பொலிவு ஈஸ்வரியே
கவனத்தை திருப்பும் கடலோர  ஈஸ்வரியே

நாகர்கள் வணங்கும் நாகபூஷணி ஈஸ்வரியே
சோகங்கள் போக்கும் சுகந்தமான ஈஸ்வரியே

சிலம்புகள் விழுந்த சிங்கார ஈஸ்வரியே
வரம்புகள் இல்லாத வண்ணமய ஈஸ்வரியே

கதைக்க வந்திடும் காருண்ய  ஈச்வரியே
கதைகளில் வந்திடும் காவிய ஈஸ்வரியே

இராமன் வணங்கிய இரக்ஷேஸ்வர் ஈஸ்வரியே
இராமனின் பகைதொழுத இராஜனின் ஈஸ்வரியே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

## 29. குகேஸ்வரி - காட்மாண்டு நேபால்- சக்தி பீடங்கள்

புரியாத இரகசியமே பூரிப்பான இரத்தினமே
அறியாத ஆனந்தமே  அளவில்லா ஐஸ்வர்யமே

தெரியாத ஞானமே தெளிவாக்கும் தேவியே
சரியாத மேருவே சலிப்பில்லா காலமே

விரியாத மொட்டே விரிந்திடும் கமலமே
எரிந்திடும் நெருப்பே எழிலான ஜோதியே

முதன்மை முட்டியே முக்தியின் முத்திரையே
பதஞ்சலி யோகமே பாதையின் முடிவே

மகத்துவ மஹாஷிராவே மகிஷ மர்த்தினியே
அகத்தின் அன்னையே அரவணை என்னையே

பசுபதியின் நாயகியே பவித்திர நறுமணமே
அசுரர்களை அழித்தவளே அனுதினம் காப்பவளே

மனதின் அசுரரை மாதாநீ அழிப்பாயே
இனத்தின் ஆளுமையை இனிதே அழிப்பாயே

அகந்தையும் பற்றும் அன்றே  அழியுமே
அகக்கண் திறந்திட அன்னையும் தெரிவாளே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

## 30. சந்திரநாத் பவானி – பங்களாதேஷ்-சக்தி பீடங்கள்

வலதுகரம் விழுந்த வசீகர மலையே
சுலபத்தில் ஏறமுடியா சுந்தர மலையே

சந்திர நாதனின் சக்தி மலையே
தந்திர சக்தியின் தாரணி மலையே

பவானி நாயகியின் பவித்திர மலையே
பவானி பீடத்தின் பங்களாதேஷ் மலையே

காலத்தின் கோலமான காளியின் மலையே
ஞாலத்தின் மெய்யான ஞானமான மலையே

நித்திய சக்தியே  நிலையான மலையே
சத்திய உருவே சந்திரநாத் மலையே

வளையும் பாதையே வளமான  மலையே
அலையும் மனமே அறியும் உன்னையே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

## 31. வராஹி - பஞ்சஸாகர்- உத்தரகாண்டம்- சக்தி பீடங்கள்

நீரில் பிரதிபலிக்கும் நிஜமான மா வராஹி
ஊரில் ஒளிவீசும் ஒய்யார மா வராஹி
பேரில் உயிரூட்டும் பேரின்ப மா வராஹி
போரில் வென்றிடும் பூலோக மா வராஹி

பற்கள் விழுந்திடும் பவித்திர மா வராஹி
வெற்றியை ஈந்திடும் விஜய மா வராஹி
கற்றவை அனைத்தும் கருணை மாவராஹி
மற்றவை யாவும் மாயை மா வராஹி

உத்தர காண்டத்து ஒயிலான மா வராஹி
நித்தியம் அவளே நிலையான மாவராஹி
எத்திசை நோக்கினும் எழிலான மா வராஹி
வித்தைகள் புரிவாள் வீரநாயகி மா வராஹி

மஹா ருத்ரன் நாயகி மா வராஹி
மஹா லக்ஷ்மி ஸ்வரூப மா வராஹி
மஹா சக்தி உருவமே மா வராஹி
மஹா வித்யா மங்களமே மா வராஹி

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

# 32. பிரபாஸ் சக்தி - சந்திரபாக் குஜராத்- சக்தி பீடங்கள்

பசிப்பிணி போக்கும் பார்வதியின் வயிறே
நிசியிலும் உறங்காத நித்திய வயிறே

சந்திரன் வணங்கிய சத்திய வயிறே
தந்திரம் புரியும் தாராள வயிறே

குஜராத் மாநில கோமள வயிறே
நிஜமான சக்தியான நிர்மல வயிறே

அருளைப் பொழியும் அழகான வயிறே
கருணை வழியும் களங்கமில்லா வயிறே

விரதத்திலும் நிறையும் விலையில்லா வயிறே
பிரபாஸ் பட்டினத்து பிரசித்தி வயிறே

குறையில்லா சக்தியின் கோவிலின் வயிறே
கரையில்லா கடலில் காக்கும் வயிறே

முக்கூடல் சங்கம முக்கிய வயிறே
அக்கரை சேரவே அருளும் வயிறே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

# 33. அலோபி தேவி - த்ரிவேணி சங்கமம்- அலஹாபாத் - சக்தி பீடங்கள்

கங்கை யமுனை சரஸ்வதி சங்கமமே
இங்கே இவைகள் இணையும் சங்கமமே
பொங்கும் ஆன்மீகம் பெருகும் சங்கமமே

உடலும் உள்ளமும் ஒன்றாகும் சங்கமமே
கடலும் கரையும் காணாத சங்கமமே
தடங்கல் இல்லாது தவழும் சங்கமமே

கனவும் உறக்கமும் விழிப்பும் லலிதாவே
மனமும் உடலும் ஆன்மாவும் லலிதாவே
தினமும் இரவும் பகலும் லலிதாவே

விரலும் இறுதியில் விழுந்த லலிதாவே
கரமும் மரமாய் காணாத லலிதாவே
உரமாய் வாழ்வில் உணர்வேன் லலிதாவே

உலகத்தின் அன்னையே உண்மை லலிதாவே
அலகாபாத் அன்னையே அருவமான லலிதாவே
சுலபத்தில் அறிவேன்  சுகந்த லலிதாவே

தத்வம் அதுவே தரணியில் லலிதாவே
புத்தியும் அறியும் புதுமலர் லலிதாவே
சத்தியம் நீயே சங்கம லலிதாவே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

## 34. மா பத்ரகாளி – குருக்ஷேத்ரம்- சக்தி பீடங்கள்

கணுக்கால் விழுந்த காளியின் பீடமே
அணுவும் விரிய அண்டமான பீடமே

வீரியம் நிறைந்த வெற்றியின் பீடமே
போரிலே காத்திடும் பெருமை பீடமே

பாண்டவர் வணங்கிய பத்ரகாளி பீடமே
ஆண்டவன் கண்ணனும் வேண்டிய பீடமே

தருமம் வென்றிட அருளிய பீடமே
கருமை நிறத்து காளியின் பீடமே

அதருமம் தோற்றிட ஆற்றல் பீடமே
விதவித உருவில் வீற்றிடும் பீடமே

குருவாய் அருளும் கோவில் பீடமே
உருவாய் தெரியும் உக்கிர பீடமே

செருக்கை அழிக்கும் செந்நிற பீடமே
கருத்தில் நிறையும் கண்கவர் பீடமே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

## 35. மா சாரதா தேவி – மைஹார்- சக்தி பீடங்கள்

சாந்தத்தின் உருவே சாரதா உருவே
காந்தமாய் இழுப்பாய்  கவனத்தை உன்னுள்ளே

மார்பகம் விழுந்திட மாறாத உருவே
சேர்ந்திட அழைப்பாய் செவ்வனே உன்னுள்ளே

அன்னையின் ஆபரணமே அழகான உருவே
என்னையும் அணைப்பாய் எழிலாய் உன்னுள்ளே

மத்தியில் அமைவாய் மரகத உருவே
புத்தியை தீட்டுவாய்  புதிதாய் உன்னுள்ளே

உடலுக்குள் அழியாது உள்ள உருவே
கடலைக் கடந்திட கவர்வாய்  உன்னுள்ளே

ஸ்தூல உருவே சூக்ஷும உருவே
ஸ்தூலத்தின் உள்ளிருக்கும் சுவாச உருவே

காரண உருவே கலங்காத உருவே
பூரண உருவே பொலிவான உருவே

உண்மை உருவே மாயை உருவே
கண்ணுக்குத் தெரியாத காருண்ய உருவே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

## 36. நந்திகேஸ்வரி - மேற்கு வங்காளம்- சக்தி பீடங்கள்

கழுத்தின் ஆரம் கருங்கல்லாய் மாறும்
தொழுதிட நிறமும் சிவப்பாய் மாறும்

குங்கும சிவப்பில் குலுங்கும் அழகு
பொங்கும் அழகில் பொலிவும் பிறக்கும்

கண்ணுக்கு கல்லிலும் கடவுளும் தெரியும்
மண்ணிலே மரத்திலே மாறாது புரியும்

எண்ணத்தில் எழுத்தில் எழிலாய் அறியும்
தண்ணென தொடுகையில் தவமும் புரியும்

செவிகள் கேட்கும் செவ்வாய் பேசும்
புவியில் யாவும் புன்னகை பூக்கும்

நந்திகேஸ்வரி கண்டிட நாற்புறமும் சிறக்கும்
அந்திப்பொழுதின் சிவப்பும் ஆரமாய் அணியும்

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

## 37. விஸ்வேஸ்வரி - ராஜமுந்திரி- சக்தி பீடங்கள்

உலகத்தின் நாயகி உண்மை நாயகி
விலையில்லா நாயகி விஸ்வேஸ்வர நாயகி

கவுதமரின் பாவங்களை கழுவிய நாயகி
கவுதமருக்காக வந்த கங்கையின் நாயகி

கன்னங்கள் விழுந்த களங்கமில்லா நாயகி
புன்னகை வீசும் பொலிவான நாயகி

கோடிஸ்வர நாயகனின் கோவில் நாயகி
கோடி புண்ணியங்களின் கோலாகல நாயகி

சக்கரங்களின் நாயகி சதுரங்க நாயகி
தக்க தருணத்தில் சிக்கெடுக்கும் ராகினி

ஆந்திர பிரதேசத்து அழகான நாயகி
சாந்தத்தின் நாயகி சங்கரன் நாயகி

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

## 38. நயினா தேவி - ஹிமாச்சல் பிரதேசம்- சக்தி பீடங்கள்

எங்கும் நிறைந்த எழிலான விழிகளே
பொங்கும் கருணையில் பூக்கும் விழிகளே

சிங்கத்தில் அமர்ந்த சினம்கொண்ட விழிகளே
மங்களம் பொங்க மகிஷனைக்கொன்ற விழிகளே

இடையனுக்கு காட்சிதந்த இனிய விழிகளே
தடைகளை அகற்றும் தாட்சண்ய விழிகளே

பசுவும் பால்சுரந்த  பார்வதி விழிகளே
அசுரனை அழிக்கும் ஆனந்த விழிகளே

சும்பனைக் கொல்லும் சுகந்த விழிகளே
நிசும்பனை அழிக்கும் நிலையான விழிகளே

அகந்தை அறுக்கும் அன்பு விழிகளே
அகத்தைப் பிளக்கும் அறிவு விழிகளே

அறியாமை அகற்றும் அக்னி விழிகளே
அறிவுச் சுடராகும் அன்னை விழிகளே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

## 39. ஷோந்தேஷ் சக்தி - அமர்காந்தக்- சக்தி பீடங்கள்

வெண்ணிற கோபுரத்து வெண்ணிற சக்தியே
மண்ணிலே அமைந்த மகத்தான சக்தியே

விந்திய சத்புராவென விரியும் சக்தியே
சந்திரன் ஒளியில் மலரும் சக்தியே

பிருஷ்டம் விழுந்திட பிறக்கும் சக்தியே
அருவமாய் உருவமாய் அனைத்துமான சக்தியே

நதிகள் பிறக்கும் நளின சக்தியே
நதிகள் ஓடிட நவிலும் சக்தியே

நூறு படிகளின் நூதன சக்தியே
வேறு இல்லாத வெறுமை சக்தியே

பஞ்ச பூதங்களின் பவித்திர சக்தியே
பஞ்ச பிரதேங்களின் பிரமாண சக்தியே

மூன்று குணங்களின் மேலான சக்தியே
சான்றாய் விளங்கும் சத்திய சக்தியே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

## 40. ஸ்ரீ சுந்தரி - ஸ்ரீ சைலம்- சக்தி பீடங்கள்

அழகிற்கு அழகே ஆனந்த சுந்தரியே
முழங்கால் ஆபரணமே முதன்மை சுந்தரியே

முடிவில்லா ஆரம்பமே முழுதான சுந்தரியே
விடியலின் சிவப்பே விழிகளின் சுந்தரியே

காலமில்லா காவியமே கண்கவர் சுந்தரியே
ஆலமான விழுதே அன்பான சுந்தரியே

சத்தான சித்தே சத்திய சுந்தரியே
முத்தான முதலே முறிவில்லா சுந்தரியே

எண்ணத்தின் தூய்மையே எழிலான சுந்தரியே
மண்ணில் பக்தியாய் மலரும் சுந்தரியே

சுந்தரனின் சுந்தரியே சுகந்தமான சுந்தரியே
மந்திர வேதப்பொருளே மருவில்லா சுந்தரியே

அந்தமான அதிசயமே அகத்தின் சுந்தரியே
சொந்தமான ஆன்மாவே சொப்பன சுந்தரியே

விழிப்பான சக்தியே விந்தையான சுந்தரியே
எழிலான உறக்கமே எங்கும்நிறை சுந்தரியே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

# 41. ப்ரமராம்பிகை - ஸ்ரீ சைலம்- சக்தி பீடங்கள்

மங்கள ரூபிணி மகாலக்ஷ்மி சக்தி
அங்காள ஈஸ்வரி அகிலத்தின் சக்தி

கழுத்தின் நாயகி காக்கும் சக்தி
விழுந்த சக்தி  விசேஷ சக்தி

ஜோதிர்லிங்க சக்தி ஜோதிமயமான சக்தி
ஜோடியான சக்தி ஜோதிட சக்தி

தேனீயின் சக்தி திகட்டாத சக்தி
மேனியின் சக்தி மேவிடும் சக்தி

நிர்குணம் கொண்ட  நிஜமான சக்தி
துர்குணம் அழிக்க தூய்மையான சக்தி

சிவானந்த லஹரி சிறக்கும் சக்தி
அவாவில் பிறக்கும் அளவில்லா சக்தி

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

## 42. நாராயணி – சுசீந்திரம்- சக்தி பீடங்கள்

நான்முக நமச்சிவாய  நாராயண சக்தியே
ஆன்மீக சங்கமத்து அதிசய சக்தியே

முத்தேவர் வடிவத்து முதன்மை சக்தியே
முத்துப் பற்களின் மூலமான சக்தியே

இந்திரனை சுத்தப்படுத்திய இனிய சக்தியே
தந்திரங்கள் பலசெய்யும் தார்மீக சக்தியே

அனுசூயை சக்தியை அறியவைத்த சக்தியே
அனுக்கிரகம் புரிந்து அணைக்கும் சக்தியே

நாராயணி பேரில் நல்லருளும் சக்தியே
தாராபைரவி பேரில் தாரணியின் சக்தியே

கன்யாகுமரியில் அமைந்து காக்கும் சக்தியே
அன்னையாய் அகிலத்தில் அருளும் சக்தியே

அன்றும் இன்றும் என்றுமான சக்தியே
நின்று இருக்கும் நிலையான சக்தியே

காலத்தால் கட்டுப்படாத காரண சக்தியே
ஞாலத்தில் பரவி ஞானமான சக்தியே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

## 43. சுகந்தா – சிகர்புர்- சக்தி பீடங்கள்

சுகந்த மணத்தை சுகிக்கும் நாசியே
அகத்தின் மணத்தை அனுபவிக்கும் நாசியே

விழியின் ஒளியை விளிக்கும் விழியே
வழியைக் காட்டும் வளமான விழியே

ஒலியைக் கேட்க உதவும் செவியே
மலிவாய் இயங்கும் மானுட செவியே

சுவைக்க உதவும் சுவாரஸ்ய நாக்கே
அவையில் இனிக்கும் அமிர்த நாக்கே

உணர்வை உணர்த்தும் உயிரான தோலே
குணமாய் மாறும் குறையில்லா சக்தியே

ஐந்து உறுப்பாய் ஐயங்கள் அகற்றுபவளே
ஐந்து தேவர்களாய் அனைத்தும் காப்பவளே

ஞான இந்திரியமாய் ஞாலத்தில் இருப்பவளே
ஞான மயமாய் த்யானத்தில் தெரிபவளே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

## 44. திரிபுர சுந்தரி- உதய்பூர்- சக்தி பீடங்கள்

கால்கள் விழுந்திட காளியின் சக்தியே
கோல்கொண்டு உலகை காக்கும் சக்தியே

வாக்காய் மனமாய் வலம்வரும் சக்தியே
ஆக்கை காக்கவே அருளிடும் சக்தியே

கழிவுகள் அகற்றும் களங்கமில்லா சக்தியே
அழிவுகள் இல்லாத ஆனந்த சக்தியே

இனத்தைப் பெருக்கும் இன்பமான சக்தியே
மனத்தைக் காக்கும் மகேசனின் சக்தியே

கரங்களாய் இயங்கும் கர்மேந்த்ரிய சக்தியே
வரங்களைத் தந்திடும் வளமான சக்தியே

சைவமும் வைணவமும் சங்கமிக்கும் சக்தியே
கைவல்யம் பொங்கிடும் காருண்ய சக்தியே

கருப்பும் சிவப்பும் கலந்த சக்தியே
உருவத்தில் கூர்மமாய் உலவும் சக்தியே

அழகே உருவான ஆண்டவ சக்தியே
பழகிடும் பாங்கில் திரிபுர சுந்தரியே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

## 45. மங்கள சண்டிகா - உஜ்ஜானி - சக்தி பீடங்கள்

மங்கள சண்டிகா மங்காத சண்டிகா
வங்காள சண்டிகா வாடாத சண்டிகா

மணிக்கட்டு சண்டிகா மரகத சண்டிகா
அணிகலன் சண்டிகா அழகான சண்டிகா

உற்சாக சண்டிகா உயிர்மூச்சு சண்டிகா
பொற்கால சண்டிகா பொன்னிற சண்டிகா

உஜ்ஜானி சண்டிகா உணர்வின் சண்டிகா
அஞ்சாத சண்டிகா அயராத சண்டிகா

சங்கரன் சண்டிகா சாகச சண்டிகா
மங்கல சண்டிகா மாறாத சண்டிகா

தெற்கிலே சண்டிகா  திசையெங்கும் சண்டிகா
கல்லிலே சண்டிகா மண்ணிலே சண்டிகா

வடக்கிலே  சண்டிகா வகையான சண்டிகா
கிழக்கிலே சண்டிகா கீர்த்திமிகு சண்டிகா

மேற்கிலே சண்டிகா மேவிடும் சண்டிகா
ஏற்றமிகு சண்டிகா எங்குமே சண்டிகா

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

# 46. விசாலாக்ஷி – காசி- சக்தி பீடங்கள்

காசியின் விழிகளே காக்கும் விழிகளே
மாசில்லா விழிகளே மலர்ந்த விழிகளே

விரிந்த விழிகளே  விசால விழிகளே
பரந்த விழிகளே பரவச விழிகளே

தாடங்க விழிகளே தாராள விழிகளே
ஆபரண விழிகளே அலங்கார விழிகளே

சக்தியின்  விழிகளே சங்கரனின் விழிகளே
முக்தியின் விழிகளே மோட்சத்தின் விழிகளே

விடுவிக்கும் விழிகளே விசித்திர விழிகளே
எடுப்பான விழிகளே எழிலான விழிகளே

தாமரை விழிகளே தாட்சண்ய விழிகளே
கோமள விழிகளே குறையில்லா விழிகளே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

# 47.கபாலினி - விபாஷ் - சக்தி பீடங்கள்

அணுவாகி அண்டமாகி அனைத்துமாகி நிற்பவளே
கணுக்காலாகி பாதமாகி கபாலினியாகி நிற்பவளே

சுகமாகி சோகமாகி சொப்பனமாகி நிற்பவளே
அகமாகி வெளியாகி ஆனந்தமாகி நிற்பவளே

இசையாகி நடனமாகி இவ்வுலகமாகி நிற்பவளே
அசையும் பொருளாகி அசையாது நிற்பவளே

அலையாகி கடலாகி ஆரவாரமாய் நிற்பவளே
மலையாகி மடுவாகி மனதாகி நிற்பவளே

உலகமாகி பொருளாகி உணர்வாகி நிற்பவளே
கலக்கமாகி தெளிவாகி கருணையாகி நிற்பவளே

துக்கமாகி துயரமாகி தொலைவாகி நிற்பவளே
பக்கமாகி பரிவாகி பரவசமாய் நிற்பவளே

இருப்பதாகி இல்லாததாகி எல்லாமாய் நிற்பவளே
உருவாக்கி அருவாகி உயிராகி நிற்பவளே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

# 48. அம்பிகா - பராத்பூர் நகர் – ராஜஸ்தான்- சக்தி பீடங்கள்

சக்கரங்கள் அறுத்திட சக்கரம் அறுப்பவளே
உக்கிரம் கொண்டிட உருவம் கொண்டவளே

பாதங்கள் விழுந்திட பாலமாய் ஆனவளே
பாதங்கள் தொழுதிட பாதைகள் ஆனவளே

அறியும் பொருளாகி அறிவாக ஆனவளே
அறியாத பொருளாகி ஆன்மாவாய் ஆனவளே

காணும் பொருளாகி காட்சியாய் ஆனவளே
ஆணும் பெண்ணுமாகி அர்த்தநாரி ஆனவளே

செய்யும் செயலாகி செய்பவளாய் ஆனவளே
மெய்யும் நீயாகி மேன்மை ஆனவளே

அம்பிகை சக்தியாகி அம்மையாய் ஆனவளே
இம்மைக்கும் மறுமைக்கும் இதமாய் ஆனவளே

இதுவும் அதுவும் எதுவும் ஆனவளே
மெதுவாகி வேகமாகி மெத்தனமாய் ஆனவளே

மொத்தமாகி முழுதாகி மீதமாக ஆனவளே
சொத்தாகி சித்தாகி சத்தாக ஆனவளே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

## 49. காத்யாயினி – வ்ருந்தாவன்- சக்தி பீடங்கள்

ராசத்தில் கலந்திடும் ராதே ராதே
பாசத்தில் அணைக்கும் ராதே ராதே

கண்ணனைக் கலந்திடும் ராதே ராதே
மண்ணிலே விழுந்திடும் ராதே ராதே

ரோமங்கள் சியாமளனே ராதே ராதே
தாமரை மலர்ந்திடும் ராதே ராதே

காத்யாயினி காற்றிலே ராதே ராதே
சாத்திர உண்மையே ராதே ராதே

உமையும் சிவனும் ராதே ராதே
இமையும் கருவிழியும் ராதே ராதே

சைவமும் வைணவமும் ராதே ராதே
மையலும் கொண்டிடும் ராதே ராதே

பக்தியும் பரமானந்தமும் ராதே ராதே
முக்தியும் கைடிடும் ராதே ராதே

மகாபிரபு பாடிடவே ராதே ராதே
மகாசக்தி ஆடிடும் ராதே ராதே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

# 50. திரிபுர மாலினி –ஜலந்தர்- சக்தி பீடங்கள்

மனதுக்கு பிடித்த மாலினியாய் மாறுபவளே
தனது இஷ்டதெய்வமாய் தானாக தெரிபவளே

மாதா வைஷ்ணவி மருவின்றி தெரிவாளே
மாதா லக்ஷ்மி மாறாது தெரிவாளே

மாதா சரஸ்வதி மையமாய் தெரிவாளே
மாதா சக்தி மாலினாய் தெரிவாளே

மார்பகம் விழுந்திட மங்களம் பூண்டிடுமே
சோர்வினை அழிக்கும் சுகந்தம் வீசுமே

உற்சாகம் பொங்கிட உள்ளத்தில் வருபவளே
பற்பல இன்பங்களை பாரினில் தருபவளே

சங்கடம் போக்கிட சாகசம் செய்பவளே
மங்கலம் பொங்கிட மாலினி வருவாளே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

# 51. காமாட்சி – காஞ்சிபுரம்- சக்தி பீடங்கள்

நாபிக்கமலம் விழுந்த நலமான நிலமே
சோபிக்கும் காமாட்சியின் சொந்தமான நிலமே

கரும்பு வில்லுடன் காட்சியான நிலமே
கறுப்பு நிறமான கருணை நிலமே

பாச அங்குச பத்மாசன காமாட்சியே
வாசனை தீரவே வாகான காட்சியே

தாமரை மலருடன் தாயவள் நிற்பவளே
கோமள உருவில் கிளியுடன் நிற்பவளே

கருத்தினைப் பிழிந்து காதலாகி கசிபவளே
உருவத்தில் உள்ளத்தை உருக்கி நிற்பவளே

காஞ்சி நகரின் காமாட்சி தேவியே
வாஞ்சை உணர்வில் வாரி அணைப்பவளே

அன்னையாய் தந்தையாய் அகிலத்தைக் காப்பவளே
என்னை இப்பாடல்களை எழுத வைப்பவளே

பற்பல இடங்களில் பரவிடும் பீடங்களே
கற்றவை கல்லாதவை காண்பவை ஆனவளே

பாடலாய் ஐம்பத்தியொன்று பீடங்களாய் ஆனவளே
பாடாத பற்பல பீடங்களாய் ஒளிர்பவளே

கயிலையில் காட்சிதர கருணை செய்வாயே
பயிலும் வேதாந்தம் பற்றறுக்க உதவுவாயே

பயணம் நலமாக பார்வதி அருள்வாயே
அயராது எழுதிட அன்னை அருள்வாயே

சதாசிவன் அருளிட சக்தியை தருவாயே
சதாகாலம் நின்நினைவாக சக்தியை தருவாயே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்

பராசக்திக்கு ஒரு விண்ணப்பம்

கரங்களைக் கூப்பியே கண்மூடி வணங்கினேன்
சிரம்தாழ வணங்கினேன் சிந்தையில்  வணங்கினேன்
வரத்திருமகள் பாமாலை வாடாதிருக்க அருள்வாயே
பரம்பொருள் நீயே பராசக்தி தாயே பாதை காப்பாயே

பொருளடக்கம் செல்ல
சக்தி பீடங்கள்